தமிழ் நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1973 டிசம்பர் 3

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Training in Karate for Police Officials

* 569 *Q.*—THIRU N. DENNIS:
THIRU N. KITTAPPA:
THIRU V. BALASUNDARAM:
THIRU G. RAMASWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any training in Karate is being imparted to the Police Officials in this State both Gazetted and Non-Gazetted; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) 4—6—1973 முதல் 3—9—1973 வரையிலான மூன்று மாத காலத்திற்கு முதல் கட்டமாக அரசிதழ் பதிவு பெறாத காவல்துறை அலுவலர்கள் ஐம்பது பேருக்கு 'கராத்தே' கலையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

திரு என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, பயிற்சிக்கு எந்த அடிப்படையில் அவர்கள் எடுக்கப்படுகிறார்கள் ? ஒரு நபருக்கு என்ன செலவாகிறது ? தேர்ந்தெடுக்கப்படுகிற போலீஸ் அதிகாரிக்கு இப்பயிற்சி கம்பல்சரியாகக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது இந்தப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள், அவர்களுடைய உடல் தகுதி, கற்றுக்கொள்ளும் ஆர்வம் இந்த அடிப்படையில் தேர்ந்

தெடுக்கப்படுகிறார்கள். அது மாத்திரம் அல்லாமல், 30 வயதுக்கு மேற்படாதவர்கள் இதிலே ஈடுபடுத்தப்படுகிறார்கள். நாமே காவல் துறையினரை இந்தப் பயிற்சி பெறவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அவர்கள் இந்தப் பயிற்சி பெறுகிற காரணத்தால் பயிற்சி பெறுகிற காவல் துறையினரிடமிருந்து எந்தக் கட்டணமும் வசூலிப்பதில்லை. பயிற்சி அளிக்கும் ஆசிரியருக்கு அரசு பயிற்சிக் கட்டணமாக மாதமொன்றுக்கு ஆயிரம் ரூபாய் வழங்குகிறது.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழகத்தில் புதிதாகப் பெண்கள் போலீஸ் படை உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெண்கள் போலீஸ் படையிலுள்ள போலீஸ்காரர்களுக்கும் இம்மாதிரியான கராத்தே போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காவல் துறையினர் இப்பொழுது பெறுகிற இந்தப் பயிற்சியைப் போலவே தனியாகவும் பலர் இந்தக் காரத்தே பயிற்சியைப் பெற்று வருகிறார்கள். அதிலே பெண்களும் இருக்கிறார்கள். மாணவ மாணவியர்களும் கூட— பத்து வயது, ஆறு வயது, ஏழு வயதினர் கூட—இந்தப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பெண் போலீஸ் படை தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தக் கருத்தும் கவனத்திலே கொள்ளப்படும்.

திரு. ஜி. ராமசாமி : தலைவர் அவர்களே. இந்தக் காரத்தே விளையாட்டு ஜப்பான் நாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்த விளையாட்டாக இருந்து வருகிறது. அங்கு இந்தப் பயிற்சி எம்மாதிரி அளிக்கப்படுகிறது ? அதேபோல் தமிழ்நாட்டிலும் இந்தப் பயிற்சி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தப் பயிற்சியை இன்றைக்கு இந்தியா முழுவதும் கற்றுத் தருவதற்கான நற்சான்றிதழைப் பெற்றிருக்கிற தமிழ்மணி என்பவர் ஜப்பான் நாட்டிற்குச் சென்று, அங்கே இந்தப் பயிற்சியைப் பெற்றிருக்கிறார். ஜப்பான் நாட்டிலுள்ள ஒரு பயிற்சியாளர்தான் உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளுக்கும் இந்தக் காரத்தே பயிற்சியை அளித்து வருவதிலே தேர்ந்தவராக இருக்கிறார். அவரிடம் தமிழ்மணி பயிற்சி பெற்று நற்சான்றிதழ் பெற்று வந்திருக்கிறார்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த 'காரத்தே' என்னும் சொல்லுக்குப் பதிலாக தமிழில் நல்ல பாண்டித்தியம் பெற்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நல்ல தமிழ்ச் சொல்லைத் தமிழ்நாட்டில் மட்டும் பயன்படுத்துவதற்கு வழிவகை செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 'காரத்தே' என்ற சொல்லுக்கு ஏதோ 'வெறும் கை' என்று பொருள் சொன்னார்கள். நாம் அந்த 'காரத்தே' என்பதில் 'ரா' விலே இருக்கும் 'ா' என்னும் துணை எழுத்தை எடுத்துவிட்டு 'கரத்தே' என்ற அளவில் வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். இதிலே போதுமான பயிற்சி பெறுகிறவர்கள் திடீரென்று தாக்குதல் ஏற்படும்போது அவர்கள் கையினாலேயே தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பதால் 'கரத்தே' என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். (சிரிப்பு).

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவர் அவர்களே, இப்படி காராத்தே பயிற்சி பெறுகிற காவல் துறை அலுவலர்களுக்கு சிறப்பு ஊதியம் கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சிறப்பு ஊதியம் அல்ல. பயிற்சி பெறுகிற காலத்தில் ஒவ்வொரு நாளும் சிறப்பு உணவுக் கட்டணமாக ஒரு ரூபாய் வீதம் பயிற்சி பெறுகிற காவலர்களுக்கு அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, இந்தக் 'காராத்தே' பயிற்சி பெறுவதனால் ஏற்படுகிற பலன் என்ன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது உடல் பயிற்சிக்கு மாத்திரம் அமைந்துவிடாமல் உள்ளத்திற்கும் ஒரு நல்ல பக்குவத்தை அளிக்கக்கூடிய அளவுக்கு பயிற்சியாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இந்தப் பயிற்சியினால் கிடைக்கும் பலன் எதிர்ப்புகளைத் தடுத்துக்கொள்வதற்கு மட்டுமல்லாமல், மன ஒழுங்கிற்கு ஊறு விளைவிக்கக்கூடிய கோபம், உணர்ச்சிவசப்படுதல், ஆசைகள் போன்றவற்றை எதிர்த்துப் போராட முடியும் என்பதும் இந்தப் பயிற்சி குறித்துக் கூறப்படுகிற சிறப்புகளாகும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1973 டிசம்பர் 3

திரு. எஸ். வடிவேல் : காவல் துறைக்குப் பெண்களை எடுத்துக் கொள்ளும்போது, குறிப்பாக நல்ல வலுவுள்ள, நாட்டைப் பாது காக்கத் தைரியமுள்ள அரிசனப் பெண்களைத் தேர்ந்தெடுத்து அவர் களுக்கு முதல் ப்ரிஃபெரன்ஸ் கொடுக்க நம்முடைய அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது குறைந்த எண்ணிக்கையில்தான் பெண் காவல் படையினர் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இந்த எண்ணிக்கை பெருகுகிற காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற அந்தக் கருத்தும் கவனத்திலே கொள்ளப்படும். இப்பொழுது அரிசனப் பெண்களை எடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. யார் யார் இந்தத் தேர்வுக்கு வந் தார்களோ அவர்களிலே இப்பொழுது பலரும் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவேளை அரிசனப் பெண்களும் இருந்திடக்கூடும்.

சில்லறை நாணயத் தட்டுப்பாடு

* **570 வினா—திரு. என் கிட்டப்பா :**

திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கடந்த ஆறு மாதங்களாகத் தமிழ்நாட்டில் நிலவும் சில்லறை நாணயத் தட்டுப்பாடு குறித்து, மத்திய அரசுக்கு, மாநில அரசு தெரிவித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது குறித்து மத்திய அரசு அளித்துள்ள காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விவர அறிக்கை யொன்று @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சில்லறைத் தட்டுப் பாட்டைச் சமாளிக்கும்பொருட்டு பெரிய வியாபாரிகள் டோக்கன் களைப் பயன்படுத்துகிறார்கள். அதுபோன்ற டோக்கன்களை மாநில அரசு—அரசு முத்திரையுடன்—தயாரித்து வியாபாரிகளுக்கு வழங்குவது குறித்து அரசு ஆலோசிக்குமா ? இதற்கும் மத்திய அரசின் அனுமதி தேவையா ?

@ 601-604 ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS